# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt


**Mobile: 0449 892 066**

**Email :mtdruitttsc@gmail.com** **Web : www.mtsc.org.au**


## செய்தி மடல் 2018 — 01

**03-03-2018**

"தமிழுக்கும் அமுதென்று பெயர்" அந்த இன்பத்தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 2018 செயற்குழு உறுப்பினர்களின் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1. ***2018ம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்களின் விபரங்கள் :***

| | |
|---|---|
| தலைவர் : | திரு.சி.சுதாகரன் |
| உப தலைவர் : | திரு.பா.செந்தில்குமார் |
| செயலாளர் : | திரு.ரா.சரவணகுமார் |
| உப செயலாளர் : | திரு.சு.சசிசுதன் |
| பொருளாளர் : | திரு.பே.மகேஸ்வரமூர்த்தி |
| அதிபர் : | திருமதி.ரா.குலவீரசிங்கம் |
| உப அதிபர் : | திரு.ந.நந்தகுமார் |
| கல்விக்குழு : | திரு.பா.முரளீதரன் |
| கல்விக்குழு : | திருமதி. ரா.குலவீரசிங்கம் |
| கல்விக்குழு : | திரு.ந.நந்தகுமார் |
| கல்விக்குழு : | திருமதி.நி.ஜனார்தனன் |
| கல்விக்குழு : | திரு.தே.கில்பேட் |
| கலாச்சாரக்குழு : | திரு.தே.சிவகுமார் |
| கலாச்சாரக்குழு : | திரு.யோகராஜா |
| கலாச்சாரக்குழு : | திரு.கொ.சதீஸ்கரன் |
| செயற்குழு உறுப்பினர் : | திரு.கோ.முத்தரசு |
| செயற்குழு உறுப்பினர் : | திரு.சு.சுதாகரன் |

2. ***2018ம் ஆண்டிற்கான ஆசிரியர்களின் விபரங்கள் :***

| | |
|---|---|
| திருமதி.ராஜேஸ்வரி குலவீரசிங்கம் : | 0449 892 066 |
| திருமதி.நிருபா ஜனார்தனன் : | 0469 135 014 |
| திருமதி.பாமரதி மகேஸ்வரமூர்த்தி: | 9675 1784 |
| திருமதி.அனிதா சிவசங்கர் : | 0466 150 541 |
| திரு.செலஸ் குணரத்தினம் : | 0430 039 602 |
| திரு.சாமித்தம்பி கனகசிங்கம் : | 0451 489 664 |
| திரு.எல்விஸ் எமிலியானுஸ் : | 0424 314 740 |
| செல்வி.சிந்துஜா செல்வானந்தன் : | 0468 920 172 |
| திருமதி.தயாழினி முரளிதரன் : | 0434 284 538 |
| திருமதி.விஜயசுதா குகனேஸ்வரன் : | 0478 937 490 |
| திருமதி.மிதுளாகினி தேவகுமார் : | 0449 761 330 |
| திருமதி.கஜந்தி சதீஸ்கரன் : | 0469 077 745 |
| திருமதி.விஜயராணி பிள்ளை: | 0414 653 064 |

3. *பாடசாலை நேரம்*

பிள்ளைகளை பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும்போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.15ல் இருந்து பி.ப. 3.30 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 4.30 மணி |

4. *பெற்றோர் கலந்துரையாடல்*

எதிர்வரும் 10.03.2018 சனிக்கிழமை அன்று பி.ப. 2.30 மணிக்கு நடைபெற இருக்கும் பாடசாலை பற்றிய முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

5. *குடும்ப குதுகல தினம் (Family Fun Day)*




சென்ற வருட செயற்குழு மற்றும் பெற்றோர் கலந்துரையாடலில் தீர்மானித்தபடி குடும்ப குதுகல தினம் பாடசாலையில் எதிர்வரும் 17.03.2018 சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 5 மணிக்கு நிறைவடையும். அனைவருக்கும் மதிய உணவு பி.ப. 12.30 தொடக்கம் பி.ப. 2 மணி வரை வழங்கப்படும். பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் போட்டிகள் ஆசிரியர்கள் துணையுடன் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பெற்றேர்கள், மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

6. *மாணவர்களின் விபரங்கள்*

இந்த வருடம் அனைத்து மாணவர்களின் கல்வி கற்கும் பிரதான பாடசாலை, வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், முகவரி, மின் அஞ்சல் முகவரி மற்றும் WhatsApp செயலி விபரங்கள் அடங்கிய தரவுத்தளம் (Database) உருவாக்க இருப்பதால் இவை அனைத்தையும் உள்ளடக்கிய புதிய விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களும் விண்ணப்பப்படிவத்தை காரியாலயத்தில் பெற்றுபூர்த்திசெய்து சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

7. *மாணவர் வரவு*

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வருகை தருவது அவர்களது கல்விக்கும், பாடசாலையின் வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதாகும். அத்துடன் சமூகமொழிப் பாடசாலைகளிற்கு நியுசவுத்வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் மானியம் மாணவர்களின் வரவில் தங்கியுள்ளது. எனவே மாணவர்கள் தவறாமல் வருகைதரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

8. *பெற்றோர் கொடுப்பனவு*

சென்ற ஆண்டு தங்கள் பங்களிப்பை செலுத்த தவறிய பெற்றோர்கள் மற்றும் இந்த ஆண்டிற்கான கட்டணத்தையும் செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். ( ஒரு மாணவர் வருடக் கட்டணம் $100, மற்றும் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்களிற்கு வருடக்கட்டணம் $175.) மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்புகொள்ளவும்.

9. *பேச்சுப்போட்டி*

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப்போட்டி இரண்டாம் தவணை ஆரம்பத்தில் எதிர்வரும் 19.05.2018 அன்று பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும். முதலாம் தவணை முடிவில் அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் பேச்சுப்போட்டிக்கான பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குவார்கள். அனைத்து பாடசாலைமாணவர்களும் பேச்சுப்போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்பது எமது குறிக்கோள். எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அவற்றை மனப்பாடம் செய்வதிலும் மற்றும் அதனை திறமையாக மேடையில் பேசுவதற்கும் உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

10. ***ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல்***



பேச்சுப்போட்டி நடைபெறும் தினமான எதிர்வரும் 19.05.2018 அன்று ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

11. ***முதலுதவி சேவை (First Aid)***




மாணவர்களுக்கு முதலுதவி தேவையேற்படின் எமது கல்விநிலைய முதலுதவி உத்தியோகத்தர்கள் திருமதி.அனிதா சிவசங்கர், திருமதி.ராஜேஸ்வரி குலவீரசிங்கம், திருமதி.நிருபா ஜனார்தனன், திருமதி.தயாழினி முரளிதரன் ஆகியோர்களுடன் தொடர்புகொள்ளவும்.

12. ***ஒவ்வாமை (Allergy)***

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஏதாவது உணவுப்பண்டங்கள், குளிர்பானங்கள், பால், கடலை மற்றும் ஏனைய பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்குமானால் அதுபற்றி நிர்வாகக் குழுவிற்கும் உங்கள் பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களுக்கும் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

13. ***பெற்றோர்களின் உதவி***

வகுப்பு இடைவேளையின் போது மாணவர்களுக்கு குளிர்பானம், தேநீர் மற்றும் திண்பண்டங்கள் வழங்குவதற்கு பெற்றோர்கள் செயற்குழுவின் உப செயலாளர் திரு.சு.சசிசுதன் அவர்களை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வகுப்பு இடைவேளையின் போதுவிளையாட்டு மைதானத்தில் மாணவர்களை கண்காணிப்பதற்கு பெற்றோர்களின் உதவி மிகவும் அவசியமாக உள்ளது. எனவே இதற்கு உதவி செய்ய விரும்பும் பெற்றோர்கள் எமது உப அதிபர் திரு.ந.நந்தகுமார் அவர்களை தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

14. ***பாடசாலையில் மாணவர்களின் ஒழுங்குமுறைகள்***

- ♦ வகுப்பறையில் அமைதியாக இருந்து ஏனைய மாணவர்களை குழப்பாமல் நடந்துகொள்ளவேண்டும்.
- ♦ உங்கள் ஆசிரியர் வகுப்பறைக்குச் சென்றதன் பின்புதான் மாணவர்கள் வகுப்பறைக்கு செல்லவேண்டும்.
- ♦ வகுப்பறை பொருட்களை சொந்ததேவைகளுக்கு பயன்படுத்தாமலும் வகுப்பு உடமைகளை சேதப்படுத்தாமலும் இருக்க வேண்டும்.

15. ***இணையத் தளம் (Webpage)***

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்படுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

16. ***முகப்புத்தகம்*** facebook

மவுண்ட்றுயிட் தமிழ் பாடசாலைக்கான முகப் புத்தகபக்கம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட்டு செயற்குழு மற்றும் ஆசிரியர்களால் தேவையான தகவல்களும், அறிவித்தல்களும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பேணப்படவுள்ளது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

17. ***சமாதான நீதவான் சேவை***

பெற்றோர்கள் உங்களுக்கான சமாதான நீதவான் சேவை தேவைப்படுமிடத்து எமது செயற்குழு உறுப்பினருமான திரு.தே.கில்பேட் அவர்களை தொடர்புகொண்டு அந்தசேவையை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

18. *பாடசாலைவிடுமுறை*

எமது பாடசாலையின் தவணை ஒன்று எதிர்வரும் 14.04.2018 அன்றுடன் முடிவடைந்து தவணை இரண்டு வருகின்ற 05.05.2018 அன்று ஆரம்பமாகும் என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

19. *2018ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்*

| | |
|---|---|
| முதலாம் தவணை ஆரம்பம் : | 03.02.2018 |
| முதலாம் தவணை முடிவு : | 14.04.2018 |
| | |
| இரண்டாம் தவணை ஆரம்பம் : | 05.05.2018 |
| **பேச்சுப்போட்டி :** | 19.05.2018 |
| **அரையாண்டுப் பரீட்சை :** | 23.06.2018 |
| இரண்டாம் தவணை முடிவு : | 07.07.2018 |
| | |
| மூன்றாம் தவணை ஆரம்பம் : | 28.07.2018 |
| **கலைவிழா :** | 29.09.2018 |
| மூன்றாம் தவணை முடிவு : | 29.09.2018 |
| | |
| நான்காம் தவணை ஆரம்பம் : | 20.10.2018 |
| **சரஸ்வதி பூஜை :** | 20.10.2018 |
| **ஆண்டிறுதிப் பரீட்சை :** | 24.11.2018 |
| **நத்தார் , பரிசளிப்பு விழா மற்றும் புதிய செயற்குழு தெரிவு :** | 22.12.2018 |
| நான்காம் தவணை முடிவு : | 22.12.2018 |



**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி**
**போல் இனிதாவது எங்கும் காணோம் !**

